வேண்டுமென்றால் நம் வீடுகளிலுள்ள பிள்ளைகளுக்குத் தங்கம், பவுன் என்று பெயர் வைத்துப் பார்த்துக்கொள்ளலாமே தவிர, வாங்க முடியாது. 5 ரூபாய் நோட்டை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி, காசு மிச்சமில்லை என்று அந்தக் காலத்தில் பாடினார்கள். ஆனால், இன்று 500 ரூபாய் நோட்டை மாற்றினாலும், 5 காசுகூட மிச்சமில்லை என்று பாடும் அளவிற்கு விலைவாசி ஏறிவிட்டது.

தற்போது கட்டப்பட்டுள்ள சட்டமன்றத்தைப்பற்றி ஆளுங்கட்சியினரும், ஆதரவு கட்சியினரும் பாராட்டுகிறார்கள். 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பார்கள்; பரவாயில்லை. ஆனால், தற்போது நிலைமை என்னவென்றால், சட்டமன்றக் கூடத்திற்கு வர வேண்டும் என்றாலும், மற்ற அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டுமென்றாலும், கிரிவலம் செல்வது போல் சுற்றிச் சுற்றி வரவேண்டியுள்ளது. இங்குள்ள மற்றொரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன். தெரியாத்தனமாக பாத்ரூம் உள்ளே சென்றுவிட்டு, வெளியே வர முடியவில்லை. கதவைத் திறக்க முடியவில்லை. நான் மட்டுமல்ல; என்னுடன் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவரும் உள்ளே மாட்டிக்கொண்டார்கள். கதவைத் தட்டி சத்தம் போட்டோம். வெளியில் இருந்தவர்கள் கதவைத் திறந்துவிட்டார்கள். ஒருவழியாக வியர்த்து விறுவிறுத்து வெளியில் வந்துவிட்டோம். இதோ நான் அமர்ந்திருப்பதற்கு எதிரே, ஆளுங்கட்சியினர் அமர்ந்திருக்கும் பகுதியின் மேலே உள்ள உயர் மின்விளக்கு ஒன்று எரியவில்லை. இதுவரை அது சரிபார்க்கப்படவில்லை.

வேலை முடியாமல் setting செலவு செய்துள்ளீர்கள். "வரவு எட்டணா, செலவு பத்தணா, வாடகை சோபா 20 ரூபாய், விலைக்கு வாங்கினால் முப்பதே ரூபாய்" என்ற ஒரு திரைப்படப் பாடல் உண்டு. அதுபோல தேவையில்லாமல் setting அமைக்க, 2 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் கூடிய விரைவில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி மலரும் என்று கூறி, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பதிலுரை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பொதுப் பணித் துறைமீது

அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த திரு. தாமோதரன், திரு. துரைக்கண்ணு ஆகிய இருவரும், தி.மு.க. சார்பில் திரு. சந்திரசேகரன் அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் திரு. ரெங்கராஜன், திரு. வேல்துரை ஆகியோரும், பா.ம.க. சார்பில் திரு. காவேரி அவர்களும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பில் திருமதி லதா அவர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் திரு. இராமசாமி அவர்களும், ஆக மொத்தம் 8 பேர் உரைகளை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்களின் சீரிய தலைமையில் தி.மு.கழக ஆட்சி முதன்முதலாக மலர்ந்தபோது, பொதுப் பணித் துறை அமைச்சராக நான் இந்தத் துறையின் மானியக் கோரிக்கையை அவையிலே வைத்தேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மீண்டும் 43 ஆண்டுகளுக்குப் பிறகு, இன்று பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையை இந்த மாமன்றத்திலே வைத்து பதிலளிக்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-50*

இடையிலே இந்த மானியக் கோரிக்கையை, இந்தத் துறையை ஏற்றுப் பணிபுரிந்த தம்பி துரைமுருகன் போன்றவர்களும் மற்றும் அமைச்சரவை நண்பர்களும், தங்களுடைய பணிகளைத் திறம்பட ஆற்றியிருக்கின்றார்கள்.

பழந்தமிழகத்தில் உழவுத் தொழில், நெசவுத் தொழில், கட்டடக் கலை, நாகரிகம், பண்பாடு அனைத்தும் சிறந்து விளங்கியது என்பதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு. உலக வரலாற்று அறிஞர்கள் அனைவரும் இதனை ஒப்புக்கொண்டுப் பாராட்டி இருக்கின்றார்கள்.

நீர் மேலாண்மையைப் பொறுத்தவரை, தமிழர்களின் ஆற்றல் நம்மை வியக்க வைக்கிறது. பருவந் தவறாமல் பெய்யும் மழை நீரைத் தேக்கி, கயம், வாவி, தடாகம், பொய்கை, குட்டம், குளம், ஏரி, கிடங்கு, மடு போன்ற நீர் நிலைகளை உண்டாக்கி, அவற்றிலேயிருந்து தேவைக்கேற்ப நீரைப் பயன்படுத்தும் உத்தியைத் தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பின்பற்றி வந்துள்ளார்கள். இதனைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாக நாம் இப்போதும் தெரிந்துகொள்ள முடியும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஓடைகளின் குறுக்கே கற்சிறை எனப்படும் கல்லால் ஆன அணை கட்டித் தண்ணீரைச் சேமித்து, சிறைபிடித்துத் தேக்கிக் கால்வாய் வழியே அனுப்புகிற முறை பழங்காலத்திலேயே பெரு வழக்காக இருந்துள்ளது. எதிர்த்து வரும் போர் வீரர்களை, கற்சிறை போல ஒருவனாக நின்று தடுத்து நிறுத்துதல் தலைவன் பண்பு என்று கூறும் தொல்காப்பியம் பொருளதிகாரத்தில்

"வருசிறைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமையானும்"

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக, "கற்சிறை" என்பது இலக்கியப் பெயர். அந்தக் "கற்சிறை" இன்றைக்கும் தடுப்பணைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற பெயராக இருக்கிறது..

பூம்புகார் துறைமுகத்தில் கப்பலிலிருந்து பொருட்கள் இறக்கப்படுவதையும், தரையிலிருந்து வேறு பொருட்கள் கப்பலில் ஏற்றப்படுவதையும் பட்டினப் பாலை ஆசிரியர் உருத்திரங்கண்ணனார், மழை மேகம், கடலிலேயிருந்து நீர் எடுத்துத் தரையில் மழையாகப் பொழிவது போலவும், அந்த மழை நீர் சென்று கடலில் கலப்பது போலவும் இருந்ததாகக் கூறுகிறார்.

"வான் முகந்த நீர் மலைப் பொழியவும்,
மலைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்,
மாரி பெய்யும் பருவம் போல
நீரினின்றும் நிலத்து ஏற்றவும்,
நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்,
அளந்தறியாப் பல பண்டம்"

என்று பட்டினப் பாலை கூறுகிறது.

சங்கப் பாடல்களுக்கு அடுத்தப்படியாக சிலம்பும், மேகலையும், சிந்தாமணியும் நீரின் இன்றியமையாமையைப் பற்றிப் பேசுகின்றன.

"எந்திரக் கிணறும் இடுங்கற் குன்றமும்
வந்து வீழருவியும் மலர்ப்பூம் பந்தரும்
பரப்புநீர்ப் பொய்கையும் கரப்புநீர்க் கேணியும்
ஒளித்துறை யிடங்களும், பளிக்கறைப் பள்ளியும்
யாங்கணும் திரிந்து தாழ்ந்து விளையாடி"

என்று மணிமேகலையில் கூறுகிற இந்த அடிகள்மூலம் ஒரு நகரப் பூங்கா எப்படியிருக்க வேண்டுமென்பதைச் சீத்தலைச் சாத்தனார் காட்டுகிறார்.

குளம் வெட்டுதல், அதைச் சுற்றி மரக்கிளைகளை வெட்டி நடுதல், மக்கள் நடக்கும் வழியைச் செதுக்கிச் சீர்திருத்தல், தரிசு நிலத்தின் உள்ளிடத்தைச் செப்பம் செய்து உழுவயல் ஆக்குதல், அவற்றுடன் வளமாக நீர் வரும்படி தோண்டிச் சுற்றிலும் சுவர் எழுப்பிக் கிணற்றை உண்டாக்குதல் என்று சொல்லப்பட்ட ஐந்து பகுதிகளையும் உண்டாக்கியவன் உலகம் புகழ இன்புறுவான் என்பதை—

"குளந்தொட்டுக் கோடு பதித்து வழிசீத்து
உளந்தொட்(டு) உழுவயல் ஆக்கி-வளந்தொட்டுப்
பாகு படுங்கிணற்றோ(டு) என்றிவ்வைம்பால் படுத்தான்
ஏகும் சுவர்க்கத் தினிது"

இது சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

இலக்கியச் சான்றுகளுக்கு அடுத்தப்படியாக, அரசர்கள் நீர் ஆதாரங்களை ஏராளமாக உண்டாக்கி, தங்கள் பெயரை வரலாற்றில் இடம் பெறச் செய்துவிட்டார்கள் என்பதற்கு அடையாளமாகக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் அகழ்வாய்வுகளும் ஏராளமாக விளங்குகின்றன.

பிற்பகல் 12-55

"முதலாம் பரமேசுவரவர்மனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 669-700) இருபது சதுர்வேதி பிராமணர்களுக்குப் 'பரமேசுவரமங்கலம்' என்னும் பெயரில் பிரமதேயமாக நிலங்கொடுத்தான். அத்தோடு அவ்வூரில், 'பரமேசுவர தடாகம்' என்று ஓர் ஏரியை ஏற்படுத்தி பாலாற்றிலிருந்து நீர் கொண்டு வர, 'பெரும்பிடுகு கால்' என்னும் கால்வாயையும் வெட்ட, அக்கால்வாயிலிருந்து 'தலைவாய்', 'தலைப்பேழை', 'ஊற்றுக்கால்' என்னும் கிளைகளையும் வெட்டிக்கொள்ள அனுமதி அளித்தான்" எனக் கூரம் செப்பேடு கூறுகிறது.

உத்திரமேரூரின் ஜீவநாடியாக அமைந்தது வயிரமேகத் தடாகம் என்னும் பெரும் ஏரியாகும். கி.பி. 796 முதல் 847 வரை வாழ்ந்த பல்லவ மன்னன் நந்திவர்மனுக்கு "வயிரமேகன்" என்று ஒரு சிறப்புப் பெயர் உண்டு. இப்பெயரால் அமைந்ததுவே வயிரமேகத் தடாகம் என்னும் ஏரி என்பதை உத்திரமேரூர் செப்பேடுகளும், கல்வெட்டுகளும் இப்போதும் தெரிவிக்கின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாமன்னன் இராசேந்திர சோழன் 11 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தான் உருவாக்கிய கங்கைகொண்ட சோழபுரத்தில், "சோழ கங்கன்" என்னும் தன்னுடைய பட்டப் பெயரில், 'சோழ கங்கம்' என்னும் ஏரியை உருவாக்கினான். அந்த ஏரி, இன்று "பொன்னேரி" என மாற்றி அழைக்கப்படுகிறது. அந்த ஏரியின் வடிகாலாக அவன் தனது சிறப்புப் பெயரிலேயே அமைத்த "வீர நாராயணன் ஏரி" இன்று "வீராணம் ஏரி" என்று பெயரிடப்பட்டு இன்றளவும், "வீர நாராயணன் ஏரி" "வீராணம் ஏரியாக" பெயர் அழியாமல் புகழ்பெற்று விளங்கிக் கொண்டிருக்கிறது.

பண்டைய நூல் எனக் கருதப்படும் "கூபநூல்", ஓலைச் சுவடியிலிருந்து பதிப்பு செய்யப்பட்டு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. நிலத்தின் தன்மை பற்றியும் அங்கு வளரும் மரஞ்செடி கொடிகள் பற்றியும் அவற்றின் அடையாளம் கண்டு, நீர் இருக்கும் பகுதிகளை அறியும் முறை பற்றியும் அந்தப் பாடல்கள் கூறுகின்றன. புலவர்களும் புவியியலாளர்களும் இணைந்து அதனை விரிவாக ஆராய வேண்டியது இன்றியமையாததாகும் என்று அறிவியலார் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த இலக்கியங்களாலும், கட்டுமான அமைப்புகளாலும் நீர்வளத்தில் அக்காலத்திலேயே ஒரு தெளிவு தமிழகத்தில் இருந்தமையை உணர முடிகிறது.

இன்றைய நிலையில் தமிழகத்தின் நீர்வளம் தமிழகத்தைச் சுற்றியுள்ள அண்டை மாநிலங்களோடு ஒப்பிடும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் இங்கே குறிப்பிட்டதைப்போல பற்றாக்குறை மாநிலமாகவே இருப்பதை அனைவரும் அறிவோம். இன்று, தமிழகத்தின் நீர்வளம் இந்தியாவின் நீர்வளத்தில் 2 சதவீதம்—இரண்டே இரண்டு சதவீதம்தான். மக்கள் தொகையில் ஆறரை சதவீதமாக அமைந்துள்ளது. தமிழகத்தின் மக்கள் தொகை, இந்தியாவின் மக்கள் தொகையில் ஆறரை சதவீதம். ஆனால் நீர்வளம் இரண்டே சதவீதம்தான். இதன் காரணமாக, ஒரு இந்தியக் குடிமகனுக்குக் கிடைக்கும் நீரில் மூன்றில் ஒரு பாகம்தான் தமிழகத்தில் வாழும் ஒருவருக்கு இப்போது கிடைக்கிறது.

எதிர்காலத்தில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக, உலகெங்கும் பிரச்சினைகள் மிகப் பெரிய அளவில் உருவெடுக்கும் என ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை செய்து வருகின்றார்கள்.

இந்நிலையில், நீர் வளத்தைச் செம்மையாகக் கையாள்வதற்கும், பருவ மழைக் காலங்களில் கிடைக்கும் நீரை உரிய முறையில் சேமிப்பதற்கும், தகுந்த திட்டங்களையும், நடைமுறைகளையும் வகுக்க வேண்டும். வகுக்கப்படும் திட்டங்களின் அடிப்படையில் மக்கள் அவற்றைப் பின்பற்றி வருங்காலச் சமுதாயத்திற்குக் காத்துத் தந்திட வேண்டும்.

தமிழ்நாடு, இந்திய தீபகற்பத்தின் கடைக்கோடி மாநிலம். தமிழகத்தில் பாயும் முக்கியமான ஆறுகள் அண்டை மாநிலங்களில் உற்பத்தியாவதால் நீர்வரத்தும் அண்டை மாநிலங்களையே சார்ந்ததாக உள்ளது.

மாநிலத்தின் மேற்பரப்பு (Surface Water) நீர் ஆதாரம் 853 டி.எம்.சி. எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அந்த 853 டி.எம்.சி.-யில் தமிழகத்திற்குக் கிடைப்பது 592 டி.எம்.சி. அடி மட்டுமே. எஞ்சிய 261 டி.எம்.சி. அடி நீர்; கர்நாடக மாநிலத்தில் உற்பத்தியாகும் காவிரியிலிருந்தும், கேரளாவிலே பரம்பிக்குளம் ஆழியாறு, பெரியாறு, வைகை ஆகியவற்றிலிருந்தும், ஆந்திர மாநிலத்தில் உள்ள கொசஸ்தலையாற்றிலிருந்தும் பெறப்படுகின்றது.

பிற்பகல் 1-00

எனினும், கிடைக்கும் நீர்வளத்தைச் செம்மையாகப் பயன்படுத்திட வேண்டும் என்னும் முனைப்போடு பல்வேறு பாசன மேம்பாட்டுத் திட்டங்கள் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மேட்டூர் அணை, 1934 ஆம் ஆண்டிலும், பூண்டி நீர்த் தேக்கம் 1944 ஆம் ஆண்டிலும் அதைத் தொடர்ந்து 1947 இல் சுதந்திரம் பெற்ற பிறகு—காங்கிரஸ் ஆட்சியில் பவானிசாகர் அணை 1956 ஆம் ஆண்டிலும், சாத்தனூர் அணை 1958 ஆம் ஆண்டிலும், மணிமுத்தாறு அணை 1958 ஆம் ஆண்டிலும், வைகை அணை 1959 ஆம் ஆண்டிலும், வீடூர் அணை 1959 ஆம் ஆண்டிலும், பரம்பிக்குளம் ஆழியாறு அணைகள் 1962 ஆம் ஆண்டிலும் காங்கிரஸ் ஆட்சியில் கட்டப்பட்டு தமிழகப் பாசன வசதிகளுக்கு உயிர்நாடியாகத் திகழ்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட முன்னேற்றக் கழக அரசு 1967 இல் பதவியேற்ற பின்பு, தமிழகத்தில் நீர் ஆதாரங்களைப் பெருக்கிட பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாடு அரசுக்கும், கேரள அரசுக்குமிடையே நதிநீரை எப்படிப் பங்கிடுவது என்று ஆராய்ந்து தீர்வுகாண இரு மாநிலங்களின் மாநாடு 10-5-1969 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. அப்போது தமிழகத்தின் முதல் அமைச்சர் என்ற முறையில் நானும், கேரள முதல்வர் தோழர் ஈ.எம்.எஸ். அவர்களும் அந்த மாநாட்டிலே கலந்துகொண்டோம்.

மாநாட்டின் முடிவில் பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டம், பவானித் திட்டம், பாம்பாறு படுகை, சிறுவாணித் திட்டம், கபினியாறு ஆகியவற்றின் தண்ணீரைப் பகிர்ந்துகொள்வது தொடர்பாக ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் 50 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு பயனற்ற நிலையில் இருந்த பரம்பிக்குளம்-ஆழியாறு அணைத் திட்டம், 1969 ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டிற்கு வந்தது என்பதைப் பெருமிதத்தோடு நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அடுத்து, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் பாம்பாறு, வாணியாறு, கெலவரப்பள்ளி, தொப்பையாறு போன்ற நீர்த்தேக்கங்கள் புதிதாக அமைக்கப்பட்டன.

1989-1991 ஆம் ஆண்டு கழக ஆட்சியில், நெல்லை மாவட்டம் அடவி நயினார் நீர்த்தேக்கத் திட்டம், திண்டுக்கல் மாவட்டம் நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம், பெரியாறு வைகை பாசன நவீனப்படுத்தும் திட்டம், தேசிய நீர் நிர்வாகத் திட்டத்தின்கீழ் சாத்தனூர், கோதையாறு, தாமிரபரணி, கம்பம் பள்ளத்தாக்கு, அமராவதி பள்ளத்தாக்கு ஆகியவற்றின் மேம்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

அம்மையார் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் - மிருகண்டா நதி, செண்பகத்தோப்பு, வரட்டாறு-வள்ளியாறு, வடக்குப் பச்சையாறு ஆகிய நீர்த்தேக்கத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

1996-2001 இல் மீண்டும் தி.மு.கழக ஆட்சியில் மோர்தானா நீர்த்தேக்கத் திட்டம், நெல்லை மாவட்டத்தில் நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டம், *(மேசையைத் தட்டும் ஒலி)* குமரி மாவட்டத்தில் பொய்கையாறு நீர்த்தேக்கத் திட்டம், வேலூர் மாவட்டத்தில் பாலாறு பாசன அமைப்புத் திட்டம், பொன்னை அணைக்கட்டு பாசன அமைப்புத் திட்டம், கடலூர் மாவட்டத்தில் தொழுதூர்

மற்றும் பிலாந்துறை பாசன அமைப்புத் திட்டம், தருமபுரி மாவட்டத்தில் பாரூர் நெடுங்கல் பாசனக் கால்வாய் புனரமைப்புத் திட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்க வலது இடதுபுறக் கால்வாய்கள் புனரமைப்புத் திட்டம், வாணியாறு நீர்த்தேக்கக் கால்வாய் புனரமைப்புத் திட்டம், பாம்பாறு நீர்த்தேக்கக் கால்வாய் புனரமைப்புத் திட்டம், சூலகிரி சின்னாறு கால்வாய் மேம்பாட்டுத் திட்டம், மாரண்டஹள்ளி, தும்பளஹள்ளி கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம், சாத்தனூர் அணைப் பாதுகாப்புத் திட்டம், அதன் இடது மற்றும் வலதுபுறக் கால்வாய்கள், கிளைக் கால்வாய்கள் புனரமைப்புத் திட்டம்.

விழுப்புரம் மாவட்டத்தில் வீடூர் அணை கால்வாய் மேம்பாட்டுத் திட்டம், திருக்கோவிலூர் அணைக்கட்டு மற்றும் அதன் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம், கீழ்க்கண்டாரக் கோட்டை வெள்ளப் பாதுகாப்புத் திட்டம், கடலூர் மாவட்டத்தில் மணிமுத்தா நதி கால்வாய் மேம்பாட்டுத் திட்டம், கடலூர் மாவட்டத்தில் கோமுகி நதி நீர்த்தேக்கக் கால்வாய் மேம்பாட்டுத் திட்டம், மேமாத்தூர் அணை கால்வாய் மேம்பாட்டுத் திட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் ஆரணியாறு அணைக்கட்டு மற்றும் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாறு அணை மற்றும் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம், தருமபுரி மாவட்டத்தில் ஈச்சம்பாடி அணை மற்றும் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம், திருச்சி மாவட்டத்தில் கல்லகம் ஆண்டியோடைத் திட்டம், விருதுநகர் மாவட்டத்தில் குள்ளூர் சந்தை பாசன மேம்பாட்டுத் திட்டம், வெம்பக்கோட்டை அணை பாசன மேம்பாட்டுத் திட்டம், கோல்வார்பட்டி அணை பாசன மேம்பாட்டுத் திட்டம், நெல்லை மாவட்டத்தில் சர்குனியாறு பாசன மேம்பாட்டுத் திட்டம், ராமாநதி அணை பாசன மேம்பாட்டுத் திட்டம், குண்டாறு அணை பாசன மேம்பாட்டுத் திட்டம், சிவகங்கை மாவட்டத்தில் விருசுளியாறு பாசன மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன என்பதைப் பெருமையோடும், பெருமகிழ்ச்சியோடும் குறிப்பிட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

*பிற்பகல் 1-05*

*2006*-ல் பொறுப்பேற்றபின், இந்த அரசின் சார்பில், பாசனத் திட்டங்களுக்கு மிகுந்த முன்னுரிமையளித்து வருகிறோம்.

செயற்கை முறையில் நிலத்தடி நீர்ச் செறிவினை உறுதி செய்திட, அரசு மேற்கொண்ட முடிவின்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் 550 கோடி ரூபாய் செலவில் 1,859 இடங்களில் தடுப்பணைகள் கட்டப்பட்டு, அதன்மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது என்பது நிலத்தடி நீர்ப் பிரிவின் ஆய்வுமூலம் தெரிய வந்துள்ளது.

எனவே, இந்த ஆண்டும் 100 கோடி ரூபாய்ச் செலவில் தடுப்பணைகள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

காவிரி டெல்டா விவசாயிகள் பயன்பெறும் வகையில், குறிப்பாக, கடைமடைப் பகுதிகளிலும் காவிரி நீர் சென்று பாய்ந்து பாசனம் சிறப்பாக நடைபெறுவதை உறுதி செய்யும்பொருட்டு, சிற்றாறுகள், வாய்க்கால்கள், வடிகால்கள் ஆகியவற்றில் தூர் வாரும் பணிகளை நிறைவேற்றிட 12 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் அனைத்தும் செம்மையாக நிறைவேற்றப்பட்டு அடுத்த மாதத்திற்குள் இந்தத் தூர் வாரும் பணிகள் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெள்ளக் காலங்களில் காவிரியில் வரும் உபரிநீரைத் தேக்கி வைக்க மேட்டூர் அணைக்குக் கீழே கல்லணையைத் தவிர, வேறு அணை எதுவும் இல்லாத குறையைப் போக்கும் எண்ணத்தோடு, கரூர் மாவட்டம், மாயனூர் கிராமத்தில் காவிரியின் குறுக்கே அமைந்துள்ள கட்டளைப் படுகை அணையைத் தரம் உயர்த்தி கதவணையாக அமைக்கும் திட்டம் 189 கோடி ரூபாய்ச் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது 2011 ஆம் ஆண்டு பிப்ரவரியில் நிறைவுறும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

வெள்ளக் காலங்களில் தாமிரபரணி கரை புரண்டோடி வீணாகக் கடலில் கலந்துவிடும் வேளையில், கன்னடியன் கால்வாயிலிருந்து ஒரு புதிய வெள்ள நீர்க் கால்வாய் அமைத்து, வறட்சிப் பகுதியான சாத்தான்குளம் மற்றும் திசையன்விளை பயன்பெற *(மேசையைத் தட்டும் ஒலி)* தாமிரபரணி ஆற்றினைக் கருமேனியாறு மற்றும் நம்பியாற்றுடன் இணைக்கும் திட்டம் 369 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இத்திட்டம், அருகிலிருக்கும் வறட்சிப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதிகளுடன் 56 ஆயிரத்து 930 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதிகளும் அளிக்கும். இத்திட்டப் பணிகள் அனைத்தும் இன்னும்

இரண்டு ஆண்டுக் காலத்தில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மூன்றாவதாக, சாத்தனூர் அணையில் இருந்து ஏறத்தாழ 24 கிலோ மீட்டர் நீளத்திற்கு இணைப்புக் கால்வாய் அமைத்து, செய்யாற்றின் ஆலந்துார் அணைக்கட்டின் மேல்புறத்தை இணைக்கவும், 39 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஒரு வழங்கு கால்வாய் அமைத்து — வழங்கு கால்வாய் என்றால் — Sub canal — நந்தன் கால்வாயுடன் இணைக்கவும், 174 கோடி ரூபாய்ச் செலவில் அமையும் திட்டத்தினால், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, வேலூர் மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 25 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறும்.

இவற்றைத் தொடர்ந்து முதலை-முத்துவாரி, அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, மணிமுத்தாறு, வைகை குண்டாறு நதிகளை இணைக்கும் ஒரு திட்டம் ஆய்விலே உள்ளது. இத்திட்டத்தினால் தஞ்சை மாவட்டம் வெள்ள அபாயத்திலிருந்து விடுபடும், புதுக்கோட்டை மாவட்டம் பாசன வசதி பெறும்.

*பிற்பகல் 1-10*

2000 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுவரும் பங்கேற்பு பாசன மேலாண்மைத் திட்டத்தின்கீழ், பாசன நீரைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் 3,807 அமைக்கப்பட்டு, அவை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. பகிர்மான பாசன அமைப்புகளின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பொறுப்புகள் இச்சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சங்கங்களுக்கு ஒரே முறை வழங்கப்படும் கூடுதல் பராமரிப்பு மானியம் ஒரு எக்டேருக்கு 100 ரூபாய் வீதம் வழங்கப்பட்டுள்ளது.

கூவம் ஆற்றினை சீரமைப்பதற்காகப் பல்வேறு காலக்கட்டங்களில், திட்டங்கள் நிறைவேற்றப்பட்டபோதிலும், அவற்றால் போதிய பயன் ஏற்படவில்லை. இந்நிலையில் சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து கூவம் ஆற்றைச் சீரமைக்கும் புதிய திட்டம் ஒன்றை விரைவாகவும், திறம்படவும் செயல்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, "சென்னை ஆறுகள் சீரமைப்பு அறக்கட்டளை" ஒன்று தோற்றுவிக்கப்பட்டு, அதனிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த அறக்கட்டளையின் தலைவராக அரசுத் தலைமைச் செயலாளரும், உறுப்பினர்களாகப் பல்வேறு

2010 ஏப்ரல் 19] [கலைஞர் மு. கருணாநிதி]

துறைகளின் செயலாளர்களும், தொழில்நுட்ப வல்லுநர்களும் இருக்கின்றார்கள். பணியினைக் கண்காணிக்க, துணை முதலமைச்சர் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்காக, சிங்கப்பூர் அரசின் கூட்டுறவு அமைப்போடு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மேற்கொள்ளப்பட்டு, துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் ஒரு குழு சிங்கப்பூர் சென்று *(மேசையைத் தட்டும் ஒலி)* - அங்கு நிறைவேற்றப்பட்டுள்ள, சிங்கப்பூர் மற்றும் கல்லாங் ஆறுகள் சீரமைப்புத் திட்ட வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்து வந்துள்ளது.

கூவம் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதைத் தொடர்ந்து, அதன் கரையோரங்களில் வெள்ளக் காலங்களில் பாதிப்புக்குள்ளாகும் குடிசைவாழ் மக்களுக்குப் பாதுகாப்பான கான்கிரீட் வீடுகள் கட்டித் தருவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி.)*

வடகிழக்குப் பருவ காலத்தில் இயற்கையின் சீற்றத்திலேயிருந்து விவசாயிகளையும், அடித்தட்டு மக்களையும் அவர்தம் உடைமைகளையும் காக்கும்பொருட்டு, இந்த அரசு திருச்சி, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் உள்ள காவிரி ஆறு மற்றும் கொள்ளிடம் ஆறு ஆகியவற்றில் 207 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவிலும், திருச்சி மாவட்டத்தில் குடமுருட்டி ஆறு மற்றும் உய்யக்கொண்டான் கால்வாயில் 45 கோடியே 60 இலட்ச ரூபாய் செலவிலும் - ஆக மொத்தம், சுமார் 253 கோடி ரூபாய் செலவில் மேற்கொண்டுள்ள வெள்ளத் தடுப்புப் பணிகள் நடப்பு நிதியாண்டில் நிறைவடையும். நிறைந்த மகிழ்ச்சியை அந்த மாவட்டங்களிலே உள்ள மக்களுக்கு இது வழங்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாநில அரசுகளின் நிதிச் சுமையினை உணர்ந்த மத்திய அரசு, பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், தேசிய தொலைநோக்குடன் வெள்ள மேலாண்மைத் திட்டத்தினை அறிவித்துள்ளது.

இன்றைய தமிழக அரசால் ஜூலை 2008 ஆம் ஆண்டு மத்திய நீர்வள அமைச்சகத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்ட திட்டங்களையெல்லாம் ஏற்றுக் கொண்டு - திருவள்ளூர் மாவட்டம் ஆரணி ஆற்றில் வெள்ளப் பாதுகாப்புப் பணிகளுக்கு 12 கோடியே

*41 இலட்ச ரூபாய்க்கும், கொள்ளிடம் ஆற்றில் தஞ்சை, நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் வெள்ளப் பாதுகாப்புப் பணிக்காக 375 கோடியே 90 இலட்ச ரூபாய்க்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மொத்தம், 388 கோடியே 31 இலட்ச ரூபாய்க்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.*

இது தவிர, *164 கோடியே 32 இலட்ச ரூபாய் மதிப்பீட்டிலான கடலூர் மாவட்டம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் வெள்ளாற்றில் வெள்ளப் பாதுகாப்புப் பணிகள்;*

*68 கோடியே 41 இலட்ச ரூபாய் மதிப்பீட்டிலான பண்ருட்டி மற்றும் கடலூர் நகரங்களில் பெண்ணையாறு, கெடிலம், உப்பனாறு, பரவனாறு, தெற்கு மலட்டாறு ஆகியவற்றில் வெள்ளப் பாதுகாப்புப் பணிகள்;*

*பிற்பகல் 1-15*

*14 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவள்ளூர் மாவட்டம், கொசஸ்தலை ஆற்றில் நாப்பாளையம் முதல் கடல் கழிமுகத்துவாரம் வரையிலான வெள்ளப் பாதுகாப்புப் பணிகள்;*

*7 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகரினை கான்சாகிப் வாய்க்காலின் வெள்ளத்தில் இருந்து பாதுகாப்பதற்கான பணிகள் ஆகிய 4 பணிகள் 254 கோடியே 73 இலட்ச ரூபாய் செலவில் நிறைவேற்ற மத்திய நீர்க் குழுமத்தின் தொழில்நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.*

*மத்திய அரசால் அங்கீகரிப்பட்டுள்ள இத்திட்டங்கள் அனைத்தும் மத்திய அரசின் 75 விழுக்காடு மானியப் பங்களிப்புடன் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்படும். மாநில அரசின் சுமையை உணர்ந்து அதனைப் பகிர்ந்துகொள்ள முன்வந்து தமிழக மக்களைக் காத்திட வெள்ள மேலாண்மைத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ள மத்திய அரசுக்கு இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகள்:**

*தமிழ்நாட்டின் கடற்கரைகளில் ஏற்படும் கடலரிப்புகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் நடவடிக்கையாக, கன்னியாகுமரி*

மாவட்டத்தில் 5 கோடியே 26 இலட்ச ரூபாய் மதிப்பீட்டிலும், வட சென்னை எண்ணூர் விரைவு வழிச் சாலையில் 99 இலட்ச ரூபாய் மதிப்பீட்டிலும், கடலோரப் பாதுகாப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் 9 கடலோர மாவட்டங்களில் கடலரிப்புக்கான தீர்வு காண்பதற்காக 666 கோடியே 26 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் தீட்டப்பட்டுள்ள பெருந்திட்டம் மத்திய அரசின் 13-வது நிதிக் குழுவிற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அக்குழு, தமிழகக் கடலோரப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 200 கோடி ரூபாய் மானியம் அளித்திடப் பரிந்துரைத்துள்ளது என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட அணைகளைச் சிறப்பான முறையில் பராமரித்தால்தான், எந்த ஒரு சீரிய நோக்கத்தில் அந்த அணைகள் கட்டப்பட்டனவோ, அதனை நிறைவேற்ற முடியும். அதனைக் கருத்தில்கொண்டுதான் அணை பாதுகாத்தல் மற்றும் மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன் 744 கோடியே 96 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 6 ஆண்டுக் கால அளவில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த உலக வங்கியினால் தெரிவு செய்யப்பட்டுள்ள 5 மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி)

நீர்வள ஆதாரத் துறையைச் சார்ந்த 66 அணைகளிலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பொறுப்பிலே உள்ள 38 அணைகளிலும் இத்திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பாசனம் மற்றும் கிராம மக்களின் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏரிகளையும், குளங்களையும் புனரமைத்து நவீனப்படுத்தும் சீரிய நோக்கத்தில் 2,547 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நீர்வள, நிலவளத் திட்டம், உலக வங்கி நிதியுதவியோடு ஏறத்தாழ 15 இலட்சத்து 42 ஆயிரம் ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் 2007 ஆம் ஆண்டு முதல், 6 ஆண்டுக் காலத் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள 63 உப வடிநிலப்

பகுதிகளுள் (Sub-Basins) முதல் இரண்டு கட்டங்களில் 25 உப வடிநிலப் பகுதிகளில் (Sub-Basins) இதுவரை 1,443 ஏரிகள், 279 அணைக்கட்டுகள், 2,992 கிலோ மீட்டர் நீள வரத்து வாய்க்கால்கள் ஆகியவற்றில் இந்தப் புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்றாம் கட்டமாக 30 உப வடிநிலப் பகுதிகளில் (Sub-Basins) 26 உப வடிநிலங்களில் பணிகள் தொடக்க நிலையிலே உள்ளன. இந்த 30 உப வடிநிலங்களில் 1,674 ஏரிகள், 255 அணைக்கட்டுகள், 2,781 கி.மீ. நீள வரத்து வாய்க்கால்கள் சீரமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரில் வெள்ளச் சேதம் ஏற்படாமல் தடுக்க, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம்-அரும்பாக்கம் வடிகால், கூவம், அடையாறு ஆகிய நீர்வழித் தடங்களைச் சீரமைத்திட ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ், நீர்வள ஆதாரத் துறை, 633 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-20

திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழகத்தில் அமைந்த ஆரம்ப காலந்தொட்டு, தமிழக திராவிடக் கட்டடக் கலை மரபுக்கு மேலும் மேலும் பெருமை சேர்க்கும் வகையில், புதிய பல கட்டடங்களை உருவாக்கி வந்துள்ளது.

சென்னை மாநகருக்குச் சிறப்புச் சேர்க்கும் வள்ளுவர் கோட்டம், பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டை, பூம்புகாரில் சிலப்பதிகாரக் கலைக்கூடம், மூதறிஞர் இராஜாஜி நினைவு மண்டபம், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவச்சலம், அண்ணல் அம்பேத்கர், கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் ஆகியோர்க்கான நினைவிடங்கள், குமரி முனையில் பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் உட்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மன்னர்களுக்கும், சான்றோர்களுக்கும், அறிஞர் பெருமக்களுக்கும், கலைஞர்களுக்கும் மணிமண்டபங்கள், நினைவுச் சின்னங்கள் அனைத்தையும் எழிலொழுகும் வகையில் தமிழக அரசின் பொதுப் பணித் துறை கட்டி முடித்து வரலாறு படைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அந்த வகையில், 2006-க்குப்பின், இந்த அரசு பொறுப்பேற்றபின், அமைக்கப்பட்டுள்ள பல்வேறு கட்டடங்களுக்கெல்லாம் மணிமகுடம் சூட்டுவதுபோல, தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கும் வகையில் சென்னை மாநகரின் அண்ணா சாலையில் சுதந்திர இந்தியாவில் தமிழ்நாட்டின் முதல், முதலமைச்சராக இருந்த ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், மிகப் பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ள புதிய சட்டப் பேரவை - தலைமைச் செயலக வளாகம், கடந்த 13-3-2010 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களால், என் தலைமையில், தியாகத் திருவிளக்கு திருமதி சோனியா காந்தி அவர்கள் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

2009-2010 ஆம் ஆண்டு பொதுப் பணித் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் உறுதி அளித்தவாறு, 2010-2011 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை இந்தப் புதிய சட்டப் பேரவை மண்டபத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) 19-3-2010 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்களால் அளிக்கப்பட்டு மகத்தான சாதனை நிகழ்த்தப்பட்டது என்பதையும் இந்தப் பேரவையில் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வளாகத்தில் புதிய சட்டமன்றப் பேரவைக் கட்டடம், தொகுதி A-யிலும், தலைமைச் செயலகக் கட்டடம், தொகுதி B-யிலும் அமைகின்றன. 425 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான A தொகுதி கட்டடங்களின் இறுதிக் கட்டப் பணிகள் தற்போது நடைபெறுகின்றன. 279 கோடியே 56 இலட்ச ரூபாய் மதிப்பீட்டிலான B தொகுதி கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்புதிய சட்டப் பேரவை அமைந்துள்ள கட்டடத்தின் சிறப்பு பற்றி உறுப்பினர்கள் அவரவர் தகுதிக்கேற்ப, எண்ணத்திற்கேற்ப தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இன்றைக்கு ஆயிரத்து அறுபதாண்டுகளுக்கு முன்னால், கி.பி. 950 ஆம் ஆண்டில் சோழ மன்னன் பராந்தகச் சோழன் கிராம அளவிலே இருந்த மக்களாட்சி பற்றி உத்திரமேரூர் கல்வெட்டில் விவரித்துள்ளான். ஓர் அரசுக்கு மக்கள் எவ்வாறு அடிப்படை முக்கியத்துவம் உள்ளவர்கள் என்று அதிலே விளக்கப்பட்டுள்ளது. புதிய சட்டப் பேரவைக் கட்டடத்தை வடிவமைக்கும்போது இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜெர்மன் நாட்டுக் கட்டடக் கலை வல்லுநர்களிடம் நான் உத்திரமேரூர்

கல்வெட்டில் உள்ள கருத்தைக் கூறி அது இக்கட்டடத்திலே பிரதிபலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அந்த அடிப்படையிலே தான் - இந்த வளாகம் நான்கு வட்டங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வட்டமும் ஒரே அளவாக இல்லாமல் வெவ்வேறு அளவு கொண்டவை. ஒரு அரசுக்கு மக்களே பிரதானம் என்பதை விளக்கும் வகையில்-முதல் வட்டம் - பொது மக்கள் வளாகம் (Public Plaza). இரண்டாவது வட்டம்தான் மக்கள் பிரதிநிதிகளாக நாமெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு - சட்டங்களை இயற்றும் இந்த வளாகம். இது பொது மக்கள் வளாகத்தை விட அளவில் குறைவானது.

பிற்பகல் 1-25

மூன்றாவது வட்டம் - நீதித் துறையைக் குறிக்கும் வகையில் - சட்டத் துறை நூலகம் அமையும் வளாகம். இது சட்டமன்ற வளாகத்தைவிட சற்று அளவில் குறைவான வளாகம்.

கடைசியாக உள்ளதுதான் நான்கு வளாகத்தையும் விட சிறிய வட்டம் - அங்கேதான் முதலமைச்சர், மற்ற அமைச்சர்களின் அலுவலகங்கள் அமையவுள்ளன.

சென்னை மாநகரில் சர்வதேசத் தரத்தோடு கூடிய நவீன மாநில நூலகம் ஒன்று கட்டப்படும் என 2007-2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

171 கோடியே 78 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில், 34 ஆயிரத்து 502 சதுர மீட்டர் பரப்புடையதாக, முழுவதும் குளிரூட்டப்பட்டதாக, தரைத் தளம் மற்றும் எட்டு தளங்களைக் கொண்டதாக மிகப் பிரம்மாண்டமான வடிவமைப்பில் கட்டப்பட்டு வரும் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம் 2010, ஜூன் திங்களில் திறந்து வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதற்கேற்ப கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் ஐந்து மருத்துவக் கல்லூரிகள் தொடங்க கழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக, 91 கோடியே 26 இலட்ச ரூபாய் செலவில், தருமபுரியிலே மருத்துவக் கல்லூரிக்கான பணிகள் முடிவடைந்து, 19-1-2010 அன்று திறந்து

வைக்கப்பட்டது. 98 கோடியே 81 இலட்ச ரூபாய் செலவில், விழுப்புரத்திலே மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, 7-3-2010-ல் திறக்கப்பட்டன. 92 கோடியே 87 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்படும் திருவாரூர் மருத்துவக் கல்லூரி கட்டடங்களின் பணிகள் முடியுந்தறுவாயில் உள்ளன. 97 கோடியே 70 இலட்ச ரூபாய் செலவில், சிவகங்கை மருத்துவக் கல்லூரிக்கான முதற்கட்ட கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், 766 கோடியே 75 இலட்ச ரூபாய் செலவில், 1,847 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 407 பள்ளிகளில் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து, எஞ்சிய பள்ளிகளின் பணிகள் முன்னேற்றத்திலே உள்ளன.

நடப்பாண்டில் 247 கோடியே 6 இலட்ச ரூபாய் செலவில் மேலும் 303 பள்ளிகளில் கட்டடங்கள் கட்ட நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், நிறைவேற்றப்படவுள்ள சில புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகளை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அ.தி.மு.க. உறுப்பினர் திரு. தாமோதரன் இன்று முதன்முதலாகப் பேசும்போது, கேரள அரசு பாம்பாற்றின் குறுக்கே அணை கட்டுவது பற்றி இங்கே புகாராகச் சொன்னார். அதுபற்றிய விவரத்தை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

கேரள மாநிலம் மறையூரிலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ள கோவில்கடவு என்ற இடத்தின் வழியாகப் பாம்பாறு ஓடுகிறது. நமக்குக் கிடைத்துள்ள தகவலின்படி, கோவில்கடவுக்குக் கீழே, சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு ஒரு அணை கட்டி அதிலிருந்து மின்சாரம் தயாரிக்க மட்டுமே அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தப்போவதாகத் தெரிய வருகிறது. மேற்படி அணையிலிருந்து சுரங்கம் அமைத்து அருகிலே உள்ள நாச்சிமுத்து ஓடையில் மின் நிலையம் அமைத்து மின்சாரம் தயாரித்த பின்னர் அந்த ஓடை வழியாக மீண்டும் பாம்பாற்றிலேயே தண்ணீர் விட திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

அணை அமையவுள்ள இடத்திற்குக் கீழே, மின் நிலையம் அமையவுள்ள இடத்திலிருந்து தமிழக எல்லை வரை சுமார் 12 கிலோ மீட்டர் பாம்பாறு மிகவும் ஆழமான பள்ளத்தாக்கில் ஓடி வந்து அமராவதி அணையில் சேர்கின்றது.

எனவே, கட்டப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள அணையில் இருந்து மின்சாரம் தயாரித்தபின் தண்ணீர் மீண்டும் பாம்பாற்றின் வழியாகவே அமராவதி அணைக்கு வரும் வகையிலேயே தள அமைப்பு உள்ளது.

மேலும், காவிரி நடுவர் மன்றத்தின் உத்தரவில் பாம்பாறுமூலம் பெறப்படுகின்ற தண்ணீர் சம்பந்தமாக பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:-

". . . However, since the water released downstream the Pambar river, after generation of power is to flow to Tamil Nadu into Amaravathy Reservoir, the State of Kerala and Tamil Nadu shall have to jointly agree to the schedule of water releases from Pambar H.E.P., so that it does not affect the irrigation lower down in an adverse manner".

இதனை நான் நண்பர் திரு. தாமோதரன் அவர்களுக்கு பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அடுத்து, சில அறிவிப்புகளோடு என்னுடைய உரையை நிறைவு செய்து அலுவல் நேரத்திற்கு மிகாமல் நானும் ஒத்துழைப்புத் தர விரும்புகிறேன்.

## அறிவிப்புகள்@

*175 கோடி ரூபாய் செலவில் சென்னை தாடண்டர் நகரில் அரசு அலுவலர்களுக்கென்று 1,500 குடியிருப்புகள்* (apartments) *கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*50 கோடி ரூபாய் செலவில் சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் 1,500 பேர் அமரக்கூடிய நவீன கலைவாணர் அரங்கம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

---

@ *363 முதல் 376 வரையிலான பக்கங்களில் இணைப்பு* III *ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

*3* கோடி ரூபாய் செலவில் பொதுப் பணித் துறை கட்டடப் பிரிவின் அலுவலகங்களுக்குக் கணினிகள் வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*8* கோடியே *50* இலட்சம் ரூபாய் செலவில் திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் அணைக்கட்டுக் கால்வாய் சீரமைக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*8* கோடி ரூபாய் செலவில் திருநெல்வேலி மாவட்டம் நம்பியாற்றில் புதிய அணைக்கட்டு ஒன்று அமைக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*6* கோடியே *50* இலட்சம் ரூபாய் செலவில் கிருஷ்ணகிரி மாவட்டம் பாலேகுளி ஏரியிலிருந்து *28* ஏரிகளுக்குப் புதிய வழங்கு கால்வாய் (supply channels) அமைக்கப்படும்.

*9* கோடி ரூபாய் செலவில் காஞ்சிபுரம் மாவட்டம் நீஞ்சல்மடுவு அணைக்கட்டு மீண்டும் கட்டப்பட்டு கால்வாய் சீரமைக்கப்படும்.

*23* கோடியே *50* இலட்சம் ரூபாய் செலவில் மதுரை மாவட்டம் நிலையூர் கால்வாயின் நீர் கடத்தும் திறனை அதிகரித்துச் சீரமைக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*19* கோடி ரூபாய் செலவில் பெரம்பலூர் மாவட்டம் விஸ்வகுடி அருகில் கல்லாற்றின் குறுக்கே புதிய ஏரி அமைக்கப்படும்.

*2* கோடியே *50* இலட்சம் ரூபாய் செலவில் புதுக்கோட்டை மாவட்டம் வெள்ளாற்றின் குறுக்கே புதிய அணைக்கட்டு அமைக்கப்படும்.

*10* கோடி ரூபாய் செலவில் தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் அணைக்கட்டின் பாசன அமைப்பு மற்றும் ஏரிகள் சீரமைக்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்டம் முடியனாற்றின் குறுக்கே புதிய அணைக்கட்டு அமைக்கப்படும்.

*5* கோடி ரூபாய் செலவில் மதுரை மாவட்டம் வைகை ஆற்றில் விரகனூர் மதகு சீரமைக்கப்படும்.

*3* கோடி ரூபாய் செலவில் திருச்சி மாவட்டம் பனங்குடி மற்றும் குயவன் வாய்க்கால்கள் மேம்படுத்தப்படும்.

**காண்டூர் கால்வாய்த் திட்டம்:**

பரம்பிக்குளம் அணையிலிருந்து திருமூர்த்தி அணைக்கு நீரைக் கொண்டு வரும் சமதளக் காண்டூர் கால்வாய், பரம்பிக்குளம் - ஆழியாறு பாசனத் திட்டத்தின் உயிர்நாடியாக விளங்குகிறது.

45 ஆண்டுகளுக்கு முன்னதாக அமைக்கப்பட்ட இக்கால்வாயின் நீர் கொள்திறன் குறைந்து வருவதையும், அடிக்கடி உடைப்புகள் ஏற்பட்டு நீர் விநியோகம் மற்றும் மின் உற்பத்தி தடைபடுவதையும் கருத்தில் கொண்டு, இக்கால்வாயை முழுமையாகச் சீரமைக்க வேண்டும் என்று கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட விவசாயிகள் தொடர்ந்து கோரி வருகின்றார்கள். அவர்களுடைய இந்த நியாயமான கோரிக்கையை ஏற்று, இக்கால்வாயை முழுமையாகப் புதுப்பிக்க 127 கோடியே 50 இலட்சம் ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) மதிப்பீட்டிலான பெருந்திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது என்பதனை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இத்திட்டத்தினால் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த ஏறத்தாழ இரண்டு இலட்சம் விவசாயப் பெருங்குடி மக்கள் பெரும் பயனடைவர்.

**அரசின் ஆய்விலே உள்ள சில முக்கியமான திட்டங்கள்:**

தாமிரபரணி ஆறு, மருதூர் அணையிலிருந்து பிரியும் மருதூர் கீழக்கால்வாயை மேம்படுத்தி, பேரூர் புறவழிக் கால்வாயை அகலப்படுத்தி கோரம்பள்ளம் குளம் வரையில் வெள்ளக் கால்வாய் அமைத்தல்;

என்னேகொள் அணைக்கட்டின் இரு புறங்களிலுமிருந்து புதிய கால்வாய் அமைத்துப் பெண்ணையாற்றின் உபரி நீரை வறட்சிக்கு இலக்கான கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்குப் பாசன வசதி அளித்தல்;

கிருஷ்ணகிரி வட்டம் சிங்கிரிப்பள்ளி கிராமம் அருகே நாச்சிகுப்பம் ஆற்றின் குறுக்கே ஏரி அமைக்கும் திட்டம்; (மேசையைத் தட்டும் ஒலி)

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் தொகுதி செட்டியாபத்து பகுதியில் ஒரு புதிய குளம் அமைக்கும் திட்டம்;

பிற்பகல் 1-35

திருச்சி மாவட்டம், சோழகம்பட்டிவாரி, தஞ்சை மாவட்டம், அய்யனாபுரம்வாரி, முதலைமுத்துவாரி ஆகியவற்றை இணைத்து, வெள்ள நீரைப் புதுக்கோட்டை மாவட்டம் அக்னியாற்றுக்குத் திருப்பும் திட்டம், திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி பகுதிகளை வெள்ள அபாயத்திலிருந்து காக்க வளவனாறு, கோரையாறு முதலான வடிகால்களைச் சீரமைக்கும் வெள்ள மேலாண்மைத் திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றுவது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

அத்திக்கடவு—அவிநாசி கால்வாய்த் திட்டம்:

பவானி ஆற்றில் வெள்ளக் கால்வாய்களில் கிடைக்கும் உபரி நீரை காரமடை, அன்னூர், அவினாசி, புளியம்பட்டி, பல்லடம் மற்றும் பெருந்துறை ஆகிய பகுதிகளுக்குத் திருப்புவதற்கான சாத்தியக்கூறு பற்றிய தொழில்நுட்ப வல்லுநர்களின் அறிக்கையின் அடிப்படையில் அத்திக்கடவு-அவினாசி கால்வாய்த் திட்டத்தினை விரிவான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள அரசு 14-12-2009 அன்று ஆணை பிறப்பித்துள்ளது. நீண்ட நாட்களாகக் கோரப்பட்டு வரும் இத்திட்டத்திற்கான விரிவான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை இம்மாமன்றத்திற்கு பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மொத்தத்தில் பொதுப் பணித் துறையில் கட்டடப் பணிகளுக்காக, 2001 ஆம் ஆண்டு முதல் 2005-2006 ஆம் ஆண்டு வரை, 5 ஆண்டுக் காலத்தில் 2,059 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு மாறாக, 2006 ஆம் ஆண்டு முதல் 2010-2011 ஆம் ஆண்டு வரையில், 5 ஆண்டுக் காலத்தில், இந்த ஆட்சியில் 5,207 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோலவே, பாசனப் பணிகளுக்காக 2001 முதல் 2006 வரை, 5 ஆண்டுக் காலத்தில் 1,995 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு மாறாக இப்பொழுது இந்த 5 ஆண்டுக் காலத்தில், கழக ஆட்சியிலே 3,915 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வளவு நேரம் தந்துள்ள விளக்கங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தந்துள்ள வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பேரன்போடு கேட்டுக்கொள்கின்றேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்காலத் தமிழகத்தில் பாசனம் இருந்த நிலை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முதன்முதலாகப் பொதுப் பணித் துறைக்குப் பொறுப்பேற்று பொதுப் பணித் துறைக்குப் புத்துயிரூட்டிய விதம், 43 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பொதுப் பணித் துறைக்கு இதுவரையில் இல்லாத அளவிற்குக் கூடுதலான நிதியொதுக்கி பொதுப் பணித் துறைக்குப் பெருமை சேர்த்திருக்கிற நிலைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு மாவட்டங்களில் பாசனத் திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிற இந்தவேளையில், பெரிய மாவட்டமாக இருக்கிற மேட்டூர் அணை என்ற வரலாற்றுச் சிறப்புக்குரிய அணை இருந்தாலுங்கூட நெற்களஞ்சியத்தை உருவாக்கக்கூடிய, அந்த அணைப் பகுதி இருக்கிற சேலம் மாவட்டத்தில், பாசன வசதிக்குப் பற்றாக்குறை இருக்கிற நேரத்தில், மேட்டூர் தொகுதியில் வறண்ட பகுதியாக இருக்கிற கொளத்தூர் ஒன்றியத்தில் தோணிமடுவு என்ற அணைத் திட்டம், நீண்ட காலக் கோரிக்கை; தோணிமடுவு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை முதலமைச்சர் அவர்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன். அதேவேளையில் மேட்டூர் அணையின் உபரி நீரை மழைக் காலங்களில் சேலம் மாவட்டம் முழுவதற்கும் பாசனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைக்க விரும்புகிறேன்.

அதேவேளையில், பொதுவாக தென்னிந்தியாவில் நம்முடைய ஆந்திர மாநிலத்தில் மரியாதைக்குரிய அமரர் இராஜசேகர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், உலக வங்கியின்மூலமாகவும், மத்திய அரசின் மூலமாகவும் ஒரு இலட்சம் கோடி ரூபாய் நிதியைப் பெற்று, பாசனத்திற்குப் புத்துயிரூட்டினார் என்ற வரலாறும், அதைப்போல கர்நாடக மாநிலத்தில் கடந்த 20 ஆண்டுக் காலமாக 'கர்விரி ஜல நிகாம்' என்ற ஒரு பெருந்திட்டத்தைத் தயாரித்து

அந்த இரண்டு மாநிலங்களும் பாசன வசதி பெற்றதைப்போல, நம்முடைய தமிழகம் வறண்ட மாநிலமாக அண்டை மாநிலங்களிடம் கையேந்தி இருக்கிற இந்தச் சூழ்நிலையில் சின்ன ஆறு, ஓடைகளையெல்லாம் பாசனத்தைப் பெருக்கக்கூடிய வகையில் மழை நீரைச் சேமிக்கிற வகையில் ஒரு பெருந்திட்டம் தீட்டுவதற்கு மாநில அளவிலான குழு அமைத்து நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா; மாவட்ட அளவிலும் குழு அமைத்து அதை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் இப்பொழுது இங்கே அறிவித்த எல்லாத் திட்டங்களையும் ஒருங்கிணைந்து நிறைவேற்றினால் அதுவே பெருந்திட்டமாகும். அந்தப் பெருந்திட்டம் நிறைவேற, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அதற்கு "மணியும்" வேண்டும், "Money-யும்" (பணமும்) வேண்டும். *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

பிற்பகல் 1-40

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் அரிப்பைத் தடுப்பதற்குக் கற்களைக் கொட்டி கடலரிப்பைத் தடுக்கின்ற நிலையில் கற்களைக் கொட்டுகின்ற அதேவேளையில், தூண்டில் வளைவுகள் பல்வேறு மீனவ கிராமங்களில் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் இருக்கின்றன. தூண்டில் வளைவுகள் பொதுப் பணித் துறைமூலம் கடலிலே அமைக்கப்படுவதன்மூலம் முழுமையான அளவிற்குக் கடலரிப்பைத் தடுக்கின்ற நிலை உருவாகும். எனவே, தூண்டில் வளைவுகள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் கடந்துவிட்டது. சுருக்கமாக ஒரே ஒரு கோரிக்கை.

எங்களது திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட திருமக்கோட்டை, திருமேனி ஏரி மிகப் பெரிய ஏரி, 750 ஏக்கர் உள்ள ஏரி. இதைத் தூர் வாரி கரைகளைப் பலப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை 1996 ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே வைத்து வருகிறேன். இந்த ஆண்டு அது எப்படியாவது நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டு, அந்த நம்பிக்கையோடு இருக்கின்றேன். இந்த நிதியாண்டிலேயே சேர்த்து, திருமேனி ஏரியைத் தூர் வாரி, கரைகளைப் பலப்படுத்துவதற்குரிய முயற்சிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புவதோடு, வெள்ளத் தடுப்பு நடவடிக்கையாக திருத்துறைப்பூண்டி பகுதிக்கு வளவனாறு, கோரையாறு பகுதிகளை இணைத்திருக்கிறீர்கள். மிகுந்த வரவேற்புக்குரியது. அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு சேர்த்து பாமினி ஆற்றையும் அதனுடைய வலதுகரைப் பகுதியிலே ஒரு கால்வாய் அளவிற்கு நீடாமங்கலத்திலிருந்து முத்துப்பேட்டை வரையிலும் ஒரு பகுதிக் கால்வாயை உருவாக்கலாம். அதில் எந்தவிதமான இடையூறும் இல்லாமல் இருக்கும். அது வாயில் பகுதியாகவே இருக்கிற காரணத்தால் வெள்ளக் காலங்களில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல், சேதம் இல்லாமல் தவிர்ப்பதற்குரிய வாய்ப்பு இருக்கும். இதையும் ஆய்வு செய்வதற்குரிய முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது திருவாரூர் மாவட்டம் என்று சொன்னால், அதில் நானும் சேர்ந்துகொள்கிறேன். அதனால் அவையெல்லாம் பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) அவரோடு போதும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்தில் பொதுப் பணித் துறைக்குச் சம்பந்தப்பட்ட ஏரிகளில் எல்லாம் விவசாயிகள் அவர்கள் விருப்பப்பட்டு மண்ணை எடுத்துக்கொள்கின்ற உரிமை அங்கே வழங்கப்படுகிறது. அதனால் நிதி நெருக்கடியால் மிகவும்

சிரமப்படுகின்ற நம்முடைய தமிழக அரசும் அதற்கென்று நிதி ஒதுக்கி, தூர் வாருவதற்குப் பதிலாக ஆங்காங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் மண் எடுத்துக்கொள்வதற்கான உரிமையை, பொதுப் பணித் துறை அலுவலர்கள் சுட்டிக்காட்டுகின்றவண்ணம், அவர்கள் வரையறை செய்யக்கூடிய எல்லைக்குள் மண் எடுப்பதற்கு இந்த அரசு அனுமதித்தால், நிறைய ஏரிகள் ஆங்காங்கே தமிழகத்திலே ஆந்திரத்தில் இருப்பதைப்போல தூர் வாரக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொதுப் பணித் துறை ஏரிகளில் ஆங்காங்கே விவசாயிகள் மண் எடுப்பதற்கு அனுமதி தருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் மண் எடுக்கட்டும். விவசாயிகள் அல்லாதவர்கள் மண் எடுப்பைத் தடுக்கவே இப்பொழுது இந்த அரசு கடும் பிரயத்தனத்திலே ஈடுபட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(ஆ) கோரிக்கை எண் 39-கட்டடங்கள்**
**(பொதுப் பணித் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை).

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.157,48,72,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,051,88,61,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 'தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.